செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

விசேஷ பதிப்பு

இல- 776 | 1969 ஜூலை 22 செவ்வாய்க்கிழமை | ★ ★ ★ விலை சதம் 5

## பூமிக்கு திரும்பி வருகிறுர்கள் வீரர்கள்

# சந்திரப் பூமியிலிருந்து ஈகிள்கப்பல்கிளம்பியது!

ஹுவுஸ்டன், ஜூலை 22

**சந்திரனில் இறங்கிய இரு விண்வெளி வீரர்களும பூமிக்குத் திரும்புவதறகான தமது பிரயாணத்தை இன்றிரவு 11·27 மணக்கு ஆரமபித்தனர். சந்திரக் கப்பலான 'ஈகிள' இரு விண்வெளி வீரர்களும வெற்றிகரமாக சந்திர பூமியிலிருந்து கிளப்பினர்.**

ஏற்கனவே திட்டமிட்டபடி எல்லாக் கருமங்களும் அணுவளவேனும் தவருது நடைபெற்றதாக விண்வெளி வீரர்கள் தெரிவித்தனர். அப்பலோ–11 பிரயாணத்தின் மற்றெரு அபாயகரமான கட்டத்தை அவர்கள் வெற்றிகரமாக நிறைவேற்றினர்;

சந்திரனின் மேற்பரப்பில் நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) 1.48 மணிக்கு இறங்கிய சந்திரக் கப்பலான "ஈகிள்" இன்றிரவு 11.27 மணியளவில் சந்திரனை விட்டுப் புறப் பட்டது. சந்திரனில் இறங்கிய "ஈகிள்" ஏறக்குறைய 24 மணி நேரம் அங்கு இருந்துள்ளது.

சந்திரனின் மேற்பரப்பில் தாம் ஆற்ற வேண்டிய பணிகள் யாவற்றையும் செவ்வனே செய்து முடித்து சந்திரக் கப்பலுக்குத் திரும்பிய வீரர்கள் நீல் ஆம்ஸ்ட்ரோங்கும் எட்வின் ஆல்ட்ரினும் பூரண ஓய்வு எடுத்துக் கொண்டனர்.

பூமிக்குத் திரும்புவதற்கான தமது அடுத்த அபாயகரமான பிரயாணத்தைத் தொடர்வதற்கு அவர்கள் இருவரும் தம்மை தயார் படுத்திக் கொண்டனர்.

சந்திரனில் இருந்து கிளம்புவதற்கான ஆயத்தங்கள் யாவும் முடிந்ததும் விண்வெளி கட்டுப்பாட்டு அதிகாரிகளின் கட்டளையை அடுத்து சந்திரக் கப்பல் ஈகிளில் ராக்கெட் வெடியொன்று தீர்க்கப் பட்டதும் ஈகிள் மேலே எழும்பியது.

ஈகிள் மேலே எழுந்தபோது விண் வீரர் மைக்கேல் கொலின்ஸ் தாய்க் கப்பலில் சந்திரனை வலம் வந்து கொண்டிருந்தார். (ர)

### இலங்கையரும் ஆராய்வர்

ஹுவுஸ்டன், ஜூலை 21


விண்வெளி வீரர்கள் பூமிக்குக் கொண்டு வரும் சந்திரனின் மண்ணையும் கற்களையும் ஆராய்ச்சி செய்யவிருக்கும் பிரபல சர்வதேச விஞ்ஞானிகள் கொண்ட குழுவில் இலங் ஏ. பொன்னம்பெருமாவும் ஒருவராவார்.

டாக்டர் பொன்னம்பெருமா மண் ஆராய்ச்சிப் பிரிவொன்றுக்கு தலைமை வகிப்பார். (ர)

### பாராட்டு

ஹுவுஸ்டன், ஜூலை 21

சந்திரனை அமெரிக்க விண்வெளி வீரர்கள் வெற்றி கொண்ட செயலை பல உலகத் தலைவர்கள் பாராட்டி உள்ளனர். அமெரிக்க ஜனதிபதிக்கு அனுப்பியிருக்கும் செய்திகளில், "மனித வரலாற்றில் மிக மகத்தான சாதனை இது" என்று அவர்கள் மெச்சிப் பாராட்டியுள்ளனர்.



அல்ட்ரின் | ஆம்ஸ்ட்ராங் | கொலின்ஸ்

### மீனாட்சி



என்னுங்க. மதியில் கால் வைத்தானுமே மனிதன்!

போபோ பைத்தியம்! அந்தக் காலத்திலே, சூரியனையே பிடித்துத் தொட்டிலுக் காலோடு கட்டினது தெரியாதா? மதியிற் சும்மா கால் வைப்பது ஒரு பெரிய ஆச்சரியமா?,

# சந்திரனில் லூனு

ஜோட்ரல்பாங், (இங்கிலாந்து), ஜூலை 21

சோவியத் ரஷ்யா சந்திரனை நோக்கி அனுப்பிய ஆளில்லாத விண்வெளிக் கப்பலான லூனு–15 இன்றிரவு (இலங்கை நேரம்) 8-57 மணிக்கு சந்திரனின் மேற்பரப்பில் இறங்கியது.

அப்பலோ–11 வீரர்கள் சந்திரனின் மேற்பரப்பில் இறங்கிய 19 மணி 33 நிமிடத்தின் பின்னர் லூனு–15 சந்திரனில் இறங்கியுள்ளது.

லூனு சந்திரனில் இறங்கிய போதிலும் அதன் உண்மையான நோக்கம் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

சோவியத் ரஷ்யா சந்திரனை நோக்கிச் செலுத்திய "லூனு–15" சந்திரனில் இறங்கியிருப்பதை பிரிட்டிஷ் ஜோட்ரல் பாங்க் இன்றிரவு ஊர்ஜிதப்படுத்தியது.

"லூனு–15" இம் மாதம் 13-ம் திகதி ரஷ்யாவினுல் இரகசியமாக சந்திரனை நோக்கி அனுப்பப்பட்டது. சந்திரனிலிருந்து பூமிக்கு மண் எடுத்து வருவதற்காக அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் "லூனு–15" பற்றி ரஷ்யா எதுவும் அறிவிக்கவில்லை. இம் மாதம் 16-ம் திகதி லூனு–15 சந்திரனில் இறங்கும் என நம்பப்பட்டது.

லூனு–15 சந்திரனில் செயற்கைக் கோளாக மாறிவிட்டது என முன்னர் ரஷ்யா அறிவித்திருந்தது. (ர)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுக்கு உடையுடன் நீதிபதி முன் 16 வயது பெண்

# காதலனை தேடி காலியில் இருந்து கால்நடையாம்

## புறக்கோட்டையில் திரிந்த போது பொலீஸ் பிடித்தது

காலியில் இருந்து தனது காதலனைத் தேடி கால்நடையாகவே கொழும்புக்கு வந்ததாகக் கூறப்படும் காதலி ஒருத்தியை நடு இரவில் ரோட்டில் சுற்றித் திரியும் போது பொலீஸார் கைது செய்து நீதிபதி முன் ஆஜர் செய்தனர்.

அழுக்கான ஆடைகளை ஒரு மூடையி[illegible] அம் மூடையை [illegible]டுக்கியபடி, குட்டைக் [illegible] காட்சியளித்த இப் பருவப் பெண், தான் அக்குரஸ்ஸை இமதூவையைச் சேர்ந்தவள் என்றும் தனது பெயர் டபிள்யூ. ஏ. கருணவதி என்றும் கொழும்பு பிரதம நீதிபதி திரு. சில்வா முன் கூறினாள்.

16 வயது நிரம்பிய இப் பெண் நடு இரவில் புறக்கோட்டை பஸ் நிலையத்தில் சுற்றித் திரிந்த போது தாங்கள் பிடித்து வந்ததாக பொலீஸார் நீதிபதியிடம் கூறினர்.

தனது சொந்த ஊர் மாத்தறை என்றும் தான் சிறிது காலம் காலியில் தங்கிவிட்டு தனது காதலனைத் தேடிக் கால்நடையாகவே கொழும்புக்கு வந்ததாகவும் அப் பெண் நீதிபதியிடம் சொன்னாள்.

இப் பெண்ணின் பெற்றோரைத் தேடி அவர்களுக்கு விஷயத்தை அறிவிக்கும் வரை இவளை இரட்சணிய சேனை முகாமில் வைக்கும்படி உத்தவிட்ட நீதிபதி வழக்கின் மேல் விசாரணையை இம்மாதம் 31-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (ல)

## விபத்து நடந்து ஒரு மாதம் சென்று மரணம்!

மோட்டார் சைக்கிளினால் மோதப்பட்ட 60 வயது பெண் ஒருத்தி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து வெளியேறிய நாள் மரணமடைந்த சம்பவம் ஒன்று அறிவிக்கப்படுகிறது.

பிலியந்தலை போக்குந்தா என்ற இடத்தில் ஏ. ஏ. டொன் புஞ்சி நோனா என்ற பெண்ணே கடந்த ஜூன் 11-ம் திகதி மேற்படி விபத்தில் சிக்கினாள். (ல)

## பதுளையில் ஆடிரத உற்சவ விழா

சொர்ணதோட்டை, ஜூலை. 21

பதுளை ஸ்ரீ மாணிக்க விநாயகர் கதிரேசன் கோயில் ஆடி ரத உற்சவ விழா எதிர்வரும் 27-ம் திகதி நடைபெறும். இதற்கான எல்லா ஏற்பாடுகளையும் பதுளை இந்து வர்த்தக சங்கம் மேற்கொண்டுள்ளது. (ல- 282)

## உழவுயந்திரசவாரிசெய்து ரூ. 400 அபராதம் கட்டினர்

திருக்கோணமலை, ஜூலை 21

உழவுக் கலப்பை இயந்திரங்களின் "மட்கார்டு"களில் உட்கார்ந்து பிரயாணம் செய்த நால்வர் திருகோணமலை நீதிமன்றத்தில் நானூறு ரூபா அபராதமாக செலுத்தினர்.

சின்னசாமி சந்தனம், கோபால் மாதவராசா, அப்துல் ஹமீத், அப்துல் லத்தீப் ஆகியோர் மீது ட்ராக்டர் மட்கார்டுகளின் மேல் உட்கார்ந்து பிரயாணம் செய்ததாக குச்சவெளி பொலீஸார் குற்றம் சாட்டி இருந்தனர்.

எதிரிகள் குற்றவாளிகள் என ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து எதிரிகளின் வழக்கறிஞர்கள் நீதவானிடம் பரிந்து பேசுகையில் "ஐயா, ட்ராக்டர் மட்கார்டுகளின் மேல் உட்கார்ந்து பிரயாணம் செய்வது கிராமங்களில் நிலவும் புதுவித நிகழ்ச்சியாகும்" என்றனர்.

நீதவான் ஒவ்வொரு எதிரிக்கும் தலா நூறு ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ல-287)

## ஒன்பது பிள்ளைத்தாய் அதிக விலைக்கு வெங்காயம் விற்றாரா?

திருமலை ஜூலை 21

சின்ன வெங்காயத்தைக் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்கக் கூடுதல் விலைக்கு விற்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட ஒன்பது பிள்ளைகளுக்குத் தாயான தே. பி. தங்கநாயகம் என்ற பெண்ணை 1,500 ரூபா பிணையில் விடுதலை செய்த திருமலை நீதவான் திரு. விக்ரமசேகரா மேல் விசாரணையை செப்டம்பர் 21-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

தங்கநாயகம் தான் குற்றவாளி அல்ல என்று சொன்னதைத் தொடர்ந்தே 1,500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

பிணைத் தொகையைக் குறைக்கும்படி பெண்ணின் வழக்கறிஞர் சச்சிதானந்தன் நீதவானிடம் விண்ணப்பிக்கையில் எதிரியான பெண் ஒன்பது பிள்ளைகளின் தாய் என்று பரிந்து உரைத்தார்.

பிணையைக் குறைக்க முடியாது என்று கூறி வழக்கறிஞரின் விண்ணப்பத்தை நீதவான் நிராகரித்தார்.

சின்ன வெங்காயத்தை கூடுதல் விலைக்கு விற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் சுற்றவாளி என்று கூறிய மகாவித்தானகே என்ற இளைஞனையும் நீதவான் 1,500 ரூபா பிணையில் விடுதலை செய்து மேல் விசாரணையை செப்டம்பர் 21-க்கு ஒத்தி வைத்தார். (287)

## சாராயம் விற்று ரூ.150/-அபராதம்

கண்டி, ஜூலை. 21

லைசென்ஸ் இல்லாமல் சாராயம் விற்ற குற்றத்தை ஒப்புக்கொண்ட கடுகண்ணாவை மெயின் வீதியைச் சேர்ந்த எம். எச். எம். சஹான் என்பவருக்கு கண்டி மேலதிக நீதிபதி திரு. விமல் விக்ரமசூரிய ரூ 150/- அபராதம் விதித்தார். (ல)

## அவள் சிரிக்கும்போது அவர் அழுதழுது சிறை சென்றார்

காதலித்து மணம் முடித்த தன் மனைவிக்கு சீவனாம்சம் கட்ட முடியாத கணவன் ஒருவர் அழுதழுது சிறை சென்றார். மனைவியோ முகத்தில் புன்சிரிப்புடன் நின்றார்.

கொழும்பு பிரதம நீதிபதி முன் மேற்படி சம்பவம் நடந்தது.

அழகாக ஆடை அணிந்து அந்த இளம் பெண் கோர்ட்டுக்கு வந்திருந்தாள். அழுக்கான சாரம் உடுத்தி ஷவரம் செய்யாத முகத்துடன் கணவன் காணப்பட்டார்.

இவ்வழக்கில், மோதரையைச் சேர்ந்த மாரி டல்சி கோஸ்தா என்ற பெண் மொறட்டுவையைச் சேர்ந்த மைக்கல் ஜோசப் பீரிஸ் என்பவரிடம் இருந்து சீவனாம்சம் கோரியிருந்தார்.

கையில் காப்பு, காதில் தோடு அணிந்து அழகாக சாரி அணிந்து யௌவனமாகக் காட்சியளித்தாள் மனைவி.

நீதிபதி கணவனைப் பார்த்து:- என்ன, பாக்கி ரூபா 250-ஐக் கட்டுகிறீரா?

கணவன் இரண்டாக மூன்றாக வளைந்தபடி காகிதக் கட்டு ஒன்றை நீதிபதியிடம் நீட்டினார்.

நீதிபதி:- இது என்ன?

பிரதிவாதி:- சார், ஆஸ்பத்திரியில் இருந்ததற்கு அத்தாட்சியாகக் கொடுக்கப்பட்ட கார்ட்.

நீதிபதி:- ஆஸ்பத்திரி அல்ல நான் கேட்ட விஷயம்; பணம் கொண்டு வந்தீரா?

அப்போது அவசர அவசரமாக அங்கு வந்த வழக்கறிஞர் ஒருவர், தான் பிரதிவாதி சார்பில் ஆஜராவதாகக் கூறினார்.

"சார், அவரிடம் இன்று பணம் கிடையாது. டி. பி. நோய் உடையவர். சிறிது நாட்கள் ஆஸ்பத்திரியிலும் இருந்தார். இன்னொரு தவணை கொடுங்கள் பணம் கொண்டு வருகிறோம்" என்றார் அந்த வழக்கறிஞர்.

நீதிபதி:- மனைவி விரும்பினால் தவணை கொடுக்கிறேன். (மனுதாரப் பெண்ணைப் பார்த்து) அவர் தவணை கேட்கிறார்; உமக்கு இஷ்டமா?

பெண்: தினம் கூறுவது இப்படித்தான். இன்று ஆளைப் போக விட்டால் இனி பிடித்துக் கொள்வது கஷ்டம். [கோர்ட்டில் சிரிப்பு]

தவணை கொடுக்க வேண்டாம் என மனைவி பிடிவாதமாகக் கூறினார். நீதிபதி அவருக்கு மூன்று மாதம் சிறைத் தண்டனை நியமித்தார். அவர் அழுதபடி சிறை சென்றார். அவள் புன்சிரிப்புடன் கோர்ட்டை விட்டு வெளியேறினாள். (ல)

## கட்டுமரத்தின் மீது பொலீஸ் துப்பாக்கி பிரயோகம்

வல்வெட்டித்துறை, ஜூலை 21

ஊரணியில் கட்டுமரம் ஒன்றின் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஊரணியில் படகொன்றிலிருந்து பத்து மூடை சாதிக்காய் கட்டுமரமொன்றுக்கு ஏற்றப்படுவதாக பொலீஸாருக்கு தகவல் கிடைத்ததையடுத்து வல்வெட்டிப் பொலீஸார் நெருங்குவதற்கு முதல் அவர்கள் தப்பிப் போகலாம் என எண்ணியபடியாலேயே பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கட்டுமரத்தில் இருந்த ஒருவரை பொலீஸார் கைது செய்துள்ளனர். கட்டுமரத்தில் ஒருவர்தான் இருந்தாரா? அல்லது இன்னும் சிலர் இருந்து தப்பிப் போய்விட்டனரா? என பொலீஸார் ஆராய்ந்து வருகின்றனர். கட்டுமரத்திலிருந்து கைது செய்யப்பட்டவர் காயப்பட்டிருப்பதால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சந்தேக நபரும் ரூபா 25,000 பெறுமதியான சாதிக்காயும் சுங்க அதிகாரிகள் முன் ஆஜர் செய்யப்பட்டது. (ல)

## புதிய யுகம் பூத்தது

மதியை முடுக்கினான் மனிதன். மதியைப் பிடிக்கத் தாவினான். மதியில் காலூன்றி விதியையும் புறங்கண்டு விட்டான். வெற்றிவாகையுடன் பூமிக்குத் திரும்புகின்றான். வாயு மகன் மாருதியை ஒத்த விண்வெளி வீரன் நீல் ஆம்ஸ்டிரோங் மதி நாளன்று காலை எட்டு மணி நாற்பத்தேழு நிமிஷமளவில் உலகில் என்றும் பொன்றாப்புகழ் பெற்று விட்டான். மதியைக் கொண்டு விதியைக் கணித்தவர்கள், மனித மதியின் ஆற்றலைக் கண்டு இன்று திகைப்பார்கள். மற்றும் மக்களின் நயப்பிற்கும் வியப்பிற்கும் பாராட்டுக்கும் எல்லையில்லை. மதியில் கால் வைத்த புதிய யுகம் பூத்தது. விண்வெளி வீரர்கள் மூவரும் அரோகதிடகாத்திரத்துடன் பூமியில் கால் வைக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்ப்போமாக. அமெரிக்க அறிவியல் வல்லுநரின் அடுத்த போக்கை அகில உலகமும் இனி உற்றுக் கவனித்துக் கொண்டேயிருக்கும்.

தந்தி

தந்தி
சிறு விளம்பரங்கள்

மாயாஜாலம்

உங்கள் விஷயம் நிறைவேறியதற்குப் பிறகு பணம் செலுத்துங்கள். நம்பிக்கையான மலையாள மாயாஜால வசிகர பரிகாரத்தைக் கொண்டு காதல் பிரச்சினைக்கு இருவரின் பெயரை எழுதினால் 3 நாட்களில் பரிபூரணமாக தீர்த்து வைக்கப்படும். இலவச விபரங்கட்கு எழுதுங்கள். அரசாங்க அனுமதி பெற்ற மாந்திரீகர், நீலன் கந்தசாமி, நித்தம்புவை.
R 52605

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியும் சாமம் தன் கணவன் அருகில் நித்திரையிலிருந்த மனைவியின் முகத்தை வருடினராம் அவர்!

## சம்பவத்தை கோர்ட்டில் விபரித்தார் இளம்பெண்

திருகோணமலை, ஜூலை, 21

"விடியற் சாமத்தில் வீடு ஒன்றினுள் புகுந்த ஓர் இளைஞன், வீட்டினுள் தன் கணவனின் அருகே தூங்கிக் கொண்டு இருந்த கட்டழகு இளம் பெண்ணின் அருகே, தானும் படுத்தவாறு, "நான்தான் உன் புருஷன்" – என்று கூறியவண்ணம் அப்பெண்ணின் சந்திர வதனத்தைக் கைகளால் வருடினராம்.

திருகோணமலை நீதவான் திரு. டி. சி. டயிள்யூ. விக்ரமசேகரா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வீடுடைத்து உள்ளே புகுந்த வழக்கொன்றில் இத்தகவல் விபரிக்கப்பட்டது.

இவ்வழக்கில், ஹலால்டீன் என்பவரின் வீட்டை உடைத்து உள்ளே புகுந்ததாக ஷேக் அப்துல்லா என்ற இளைஞன் மீது குந்தளாய் பொலீஸார் குற்றஞ்சாட்டி இருந்தனர்.

வழக்கு விசாரணையில் ஹலால்டீன் என்பவரின் மனைவியான ஜனூபா உம்மா என்ற 19 வயது மங்கை சாட்சியம் அளித்தார்.

அவர் கூறியதாவது:—

"சம்பவ தினம் விடியற்சாமம் 3 மணி இருக்கும். நன்ருக நித்திரையில் இருந்த நான் யாரோ என் முகத்தில் விரல்களால் தடவுவதை உணர்ந்து திடீர் என்று விழித்துக் கொண்டேன். யார் என்று வினவினேன். "நான்தான் உன் புருஷன்" என்று ஒரு குரல் கூறியது. திரும்பிப் பார்த்த பொழுது எதிரி நிலத்தில் படுத்தவண்ணம் இருந்தார். கணவனும் அச்சமயத்தில் என் அருகே படுத்து இருந்தார். நான் சத்தம் இடவே எதிரியும் கணவனும் கைகலப்பில் ஈடுபட்டனர். கணவன் எதிரியை நன்ருக இடுப்பில் பிடித்துக் கொண்டார். எதிரி தில்லுமுல்லுப்பட்டு கணவனின் பிடியில் இருந்து தப்பி மீண்டும் வெளியே ஓடினர். ஆனல் வளவின் முள்ளுக்கம்பி வேலியில் எதிரியின் சாரம் சிக்கிக் கொள்ளவே கணவனிடம் மீண்டும் அகப்பட்டுக் கொண்டார். சத்தம் கேட்டு அயலவர்கள் ஓடி வந்தனர்.

"சம்பவ தினம் வீட்டின் ஜன்னல்கள் திறந்தே இருந்தன. ஆனல் கதவு பூட்டப்பட்டு சணலினல் கட்டப்பட்டு இருந்தது. சம்பவ தினம் வீட்டினுள் போத்தல் விளக்கு இருந்தது."

வழக்கறிஞர் திரு. இரங்கநாதன் குந்தளாய் பொலீஸாரின் உதவியுடன் ஆஜரானர். எதிரியின் சார்பில் வழக்கறிஞர் திரு. சந்திரபாலன் ஆஜரானர்.

மேல் விசாரணை 8-9-1969க்கு ஒத்தி வைக்கப்பட்டது. (287)

## பொலீஸார் 64 மாடுகளைப் பிடித்தனர்

கந்தானை, ஜூலை. 21

அனுராதபுரப் பிரதேசத்தில் இருந்து அனுமதிப் பத்திரமின்றி 4 லொறிகளில் ஏற்றிவந்த 64 பசுமாடுகளைக் கந்தானைப் பொலீஸார் கைப்பற்றினர்.

இம் மாடுகளைக் கொழும்புக்கு ஏற்றிவந்ததாகக் கூறப்படும் 11 பேருக்கு எதிராக கந்தானைப் பொலீஸார் கனுவன சர்க்கியூட் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளனர். (ல– 153)

## பஸ் மோதி சிறுமி மரணம்

வத்தளை, ஜூலை. 21

நாயக் கந்தையில் நடைபெற்ற ஒரு விபத்தில் எட்டு வயதுச் சிறுமி ஒருத்தி இ. போ. ச. பஸ் ஒன்றினல் மோதப்பட்டு மாண்டாள்.

வத்தளை – ஹெந்தளை ரோட்டில் நடைபெற்ற இந்த விபத்தில் டி. பிரிதிமாலா என்ற சிறுமியே இப் பரிதாபத்துக்கு உள்ளானள். (ல)

## உடுப்புவைக்கும்பெட்டியில் இரு பிரேதங்கள் கிடந்தன

நீர்கொழும்பு, ஜூலை 21

"எதிரி காலஞ் சென்ற எனது மகளான ஆரியவதியை ஆறு, ஏழு வருடங்களாகத் தனது ஆசை நாயகியாக வைத்திருந்தார். அதன் பிறகு ஆரியவதி சுமணதாச என்பவரின் ஆசைநாயகியாக இருந்தார்."

திவுலப்பிட்டியா – வல்பிட்ட தாய், மகள் கொலை வழக்கு நீர்கொழும்பு அசைஸ் கமிஷனர் திரு. வின்சன்ட் ஏ. தாமோதரம் முன் விசாரிக்கப்பட்டபோது, இறந்த ஆரியவதியின் தாயாரான ரன்மெனிக்கா (65) சாட்சியம் அளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில், திவுலப்பிட்டியா – வல்பிட்டயைச் சேர்ந்த ஆரியவதி, அவரின் மகளான வயலட் (10 மாதம்) ஆகியோரைக் கொலை செய்ததாக வர்ணகுலசூரிய மைக்கல் பெர்னண்டு என்பவர் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

ரன்மெனிக்கா தனது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:–

"நான் வேலைசெய்யும் முதலாளியின் வீட்டில் அன்னதானம் ஒன்று நடைபெறுவதால் 1966 டிசம்பர் மாதம் 31-ம் திகதி இரவு நான் வீட்டுக்கு வரமாட்டேன் என்று கூறி விட்டுச் சென்றேன். அன்று நான் வீட்டிலிருந்த இந்திராணி என்ற சிறுமியையும் என்னுடன் அழைத்துக் கொண்டு சென்றேன்.

"என்னுடைய உடுபுடவைகள் எல்லாம் வீட்டில் இருந்த இரும்புப் பெட்டி ஒன்றில் வைக்கப்பட்டு இருந்தன. 1967 ஜனவரி முதல் திகதி நான் வீட்டுக்கு வந்த போது, அன்று காலை இந்திராணி கூச்சல் போட்டுக் கொண்டு தன் வீட்டுக்கு ஓடி வந்ததாக அபிலீனு என்ற பெண் சொன்னுள். நான் வீட்டுக்குச் சென்று பார்த்த போது என் வீட்டில் இருந்த டிரங்குப்பெட்டியைக் காணவில்லை.

"மகளும் மருமகனும் வேலை ஒன்று தேடுவதற்காக தூரப் பயணம் சென்றிருப்பார்கள் என்றும் அப்போது அவர்கள் தங்களுடன் டிரங்குப்பெட்டியைக் கொண்டு சென்றிருப்பார்கள் என்றும் நான் நினைத்தேன்.

"ஜனவரி 6-ம் திகதி நான் வீட்டைச் சுற்றி சுத்தம் செய்து கொண்டிருந்தபோது காணுமற்போன டிரங்குப்பெட்டி தோட்டத்தில் புதர் ஒன்றுக்கு அடியில் இடப்பதைக் கண்டேன். அபிலீனு என்ற பெண்ணையும் அழைத்து பெட்டி கிடைத்து விட்டதாகக் கூறினேன்.

"பெட்டியில் இருந்து துர்நாற்றம் கிளம்பியது. இதனல் இதைப் பற்றி பொலீஸுக்கு கூறுவோம் என அபிலீனு சொன்னுள். பொலீஸார் வந்து பெட்டியைத் திறந்தனர். பெட்டியினுள் எனது மகள் ஆரியவதியின் பிரேதமும் அதற்கடியில் பேத்தியின் பிரேதமும் கிடந்தன."

விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. (ல)

## அப்பொழுது இரண்டாவது எதிரி 'டோச்' பிடித்தாரா?

இரண்டாவது எதிரி அறைக்குள் எரிந்து கொண்டிருந்த குப்பி லாம்பை அணைத்தார். அச்சமயம் இரண்டாவது எதிரி என்னை நிலத்தில் தள்ளி பலவந்தமாக என்னுடன் உடலுறவு கொண்டார்.

20 வயது நிறைந்த விவாகமான அழகிய இளம்பெண்ணை கற்பழித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் பெண் கமலாவதி சொன்னர்.

இவ்வழக்கில் கல்கந்தை என்ற கிராமத்தைச் சேர்ந்த கமலாவதி என்ற விவாகமான இளம்பெண்ணைக் கற்பழித்ததுடன் வீட்டை உடைத்து ரூ. 254/– பெறுமதியான உடை, ஆபரணங்களை கொள்ளை அடித்துச் சென்றதாக கருணதாச என்றழைக்கப்படும் கருணரத்ன, எலடின் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு உள்ளது.

நீர்கொழும்பு மேலதிக நீதவான் திரு. சந்திரா அமரசிங்க முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டது.

நீதவான்: முதலாவது எதிரி உம்மைக் கற்பழிக்கும்போது இரண்டாவது எதிரி மின்விளக்கை (டோச்) பிடித்தாரா?

சாட்சி: இல்லை.

நான் மரண பயத்தால் உடலுறவு கொள்ள இடமளித்தேன். முதலாவது எதிரி கொன்று விடுவேன் என்று கத்தியைக் காட்டி பயமுறுத்தினர். அதன் பிறகு நான் பக்கத்து வீட்டு சமரசேன என்பவரிடம் சொன்னேன். அவர் வந்து கள்ளன், கள்ளன் என்று சத்தம் போட்டதும் எதிரிகள் ஓடிவிட்டனர். அவர்களை சமரசேன துரத்திக் கொண்டு ஓடினர். மேலதிக விசாரணை ஆகஸ்ட் மாதம் 9ந் தேதிக்கு தவணை போடப்பட்டது. (19)

## கும்புறுப்பிட்டிக் கோஷ்டி யுத்தம் தவிர்க்கப்பட்டது

திருமலை, ஜூலை, 19

கும்புறுபிட்டி என்னும் இடத்தில் இரு கோஷ்டிகளுக்கு இடையே மூள இருந்த பெரும் யுத்தம் திருமலையில் இருந்து இன்ஸ்பெக்டர் பேரின்பநாயகம் தலைமையில் சென்ற பொலீஸ் கோஷ்டியின் தலையீட்டால் தவிர்க்கப்பட்டது.

அண்மையில் இரு கோஷ்டிகளுக்கு இடையே மூண்ட இக்கலவரத்தில் மூவர் காயமடைந்தனர். இது சம்பந்தமாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் பேரின்பநாயகம் தலைமையில் பொலீஸ் கோஷ்டி விரைந்து சென்று கலகத்தை அடக்கியது.

இக்கலவரஞ் சம்பந்தமாக பொலீஸார் கைது செய்த மூன்று நபர்களைத் திருமலை நீதவான் ஜூலை 26 வரை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவு இட்டார்.

ஆயுதந் தரித்த பொலீஸார் கும்புறுபிட்டிப் பகுதியில் ரோந்து புரிகின்றனர். (287)

## அதிசய பூனைக்குட்டி பிறந்தது

மூதூர், ஜூலை 21

இயற்கைக்கு மாருன முறையில் பூனை ஒன்று அதிசயக் குட்டி ஒன்றை ஈன்றது.

மூதூர் 4-ம் வட்டாரத்தில் வசிக்கும் எம். பி. முகம்மது லத்திப் என்பவர் வளர்த்த பூனை ஈன்ற நான்கு குட்டிகளுள் ஒன்று மூன்று கால்களையும், நான்கு செவிகளையும் உடையதாயிருந்தது. ஈன்று சற்று நேரத்துக்குள் அவ்வதிசய ஜீவன் இறந்துவிட்டது. (எ–186)

## தம்பியை செங்கல்லால் அடித்துக் கொன்ருரா?

வத்துகாமம், ஜூலை. 21

காணித் தகராறொன்றை அடுத்து 49 வயதான வியாபாரி ஒருவர் தனது தம்பியொருவரை கொலை செய்ததாகக் கூறப்படும் சம்பவம் ஒன்றுபற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

வத்துகாமத்தை அடுத்துள்ள குண்ணுபான சிரிமல்வத்தை ரோட்டிலேயே மேற்படி சம்பவம் நடந்துள்ளது.

இச் சம்பவத்தில் ஏ. பி. திஸநாயக்கா என்னும் 37 வயது நபர் ஒருவர் மாண்டுள்ளார்.

இறந்தவரும் அவர் அண்ணன் இருவருமே வியாபாரிகள். இறந்தவரின் உடம்பில் தெரியக்கூடிய வெளிக்காயங்கள் ஒன்றும் இல்லை. ஆனல், அவரின் சகோதரர் இறந்தவரை செங்கற்கல்லால் அடித்துக் கொலை செய்திருக்கிருர் என பொலீஸார் நம்புகின்றனர்.

இவ் விஷயமாகப் புலன் விசாரிக்கும் வத்துகாமம் பொலீஸார் இறந்தவரின் சகோதரனை சந்தேகத்தின் மீது கைது கைதுசெய்துள்ளனர். (ல)


கோபால் பல்பொடி

பல்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கப்படுகிறது.

S. P. S. ஜெயம் அன் கோ.

மதுரை – கொழும்பு.

விற்குமிடம்:

34, செட்டியார் தெரு

கொழும்பு – 11

தொலைபேசி எண்: 26584.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக சரித்திரத்தில் புதிய சகாப்தம்

# சந்திரன் மீது குதித்தனர் நடனமாடி மகிழ்ந்தனர்

ஹூஸ்டன், ஜூலை 22

**நடை பழகும் குழந்தைகள் போல் மிகவும் கவனமாக சந்திரன் மீது அடிமேல் அடி எடுத்து வைத்த விண்வெளி வீரர்கள் இருவரும் ஆபத்து இல்லை என்று அறிந்த பின் மேலே குதித்தனர், ஓடினர், நடனமாடினர்!**

நேற்றுக் காலை 6-27-க்கு சந்திரனை தங்கள் காலுக்கு அடியில் கொணர்ந்த அமெரிக்க விண்வெளி வீரர்கள் நீல் ஆம்ஸ்ட்ரோங்கும் எட்வின் ஒல்ட்றினும் மீண்டும் பூமிக்குத் திரும்புவதற்காக "ஈகிள்" வாகனத்தில் ஏறி அமர்ந்தனர். அச்சமயம் தாய்க் கலத்தில் இருந்த மைக்கல் கொலின்ஸ் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார்.

ஹூஸ்டனில் இருக்கும் கட்டுப்பாட்டு நிலையம் விண்வெளி வீரர்களுக்கு பின்வருமாறு கூறியது:-

"நீங்கள் இன்றைய கடமைகளைத் திறமையாக முடித்திருக்கிறீர்கள் என நாங்கள் நம்புகிறோம்."

சந்திரனில் இறங்கி விளையாட்டுப் பிள்ளைகளைப் போல் அங்கு மிங்கும் நடந்து திரிந்த வீரர்கள் இருவரும் கடமையில் கருத்தாக தேவையான மண்ணையும் கல்லையும் சேகரித்தனர்.

கீழே பூமியில் இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள கோடானுகோடி மக்கள் டெலிவிஷன் மூலம் விண்வெளி வீரர்களின் நடவடிக்கைகளைக் கண்டு வியந்தனர்.

வீரர்கள் இருவரும் முதலில் மிகவும் கவனமாக அடியெடுத்து வைத்தனர். சிறிது தூரம் சென்ற அவர்கள் அங்குள்ள நிலைமையைப் பழகிய பின்னர் குதித்தனர், நடனமாடினர்.

### நிக்ஸன் பேசினார்

சந்திரனின் மேற்பரப்பில் கருமமாற்றிய வீரர்கள் இருவரும் ஒரே ஒரு முறை மட்டும் தங்கள் கடமையை விட்டுப் போட்டு பூமியில் இருந்து தங்களுடன் டெலிபோன் மூலம் பேசிய அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸனின் பேச்சைக் கேட்டனர்.

திரு. நிக்ஸன் கூறியதாவது:-

"சொர்க்கம் மனித உலகத்தின் ஒரு பகுதியாகி விட்டது. இந்த ஒரு விநாடிக்கு மட்டும் உலக மக்கள் அனைவரும் தங்கள் பல்வேறு வேற்றுமைகளை மறந்து ஒருவராகின்றனர். நீங்கள் மூவரும் சுகமாக பூமிக்குத் திரும்ப வேண்டும் என்று உலக மக்கள் அனைவரும் ஒருமுகமாகப் பிரார்த்திக்கின்றனர்."

அமெரிக்காவின் சாதனையைப் பாராட்டி உலகமுழுவதிலுமிருந்து செய்திகள் கிடைத்துள்ளன.

நேற்று இரவு இலங்கை நேரப்படி பகல் 11-47க்கு இறங்குவது என்பதுதான் முன்னைய ஏற்பாடு. விண்வீரர்கள் தங்கள் வானரதத்தில் நித்திரை செய்து, ஓய்வெடுத்துக் கொண்ட பின் சந்திரனில் இறங்குவது என்பது ஏற்பாடு. ஆனால் தாங்கள் எவ்வளவு விரைவில் இறங்க முடியுமோ அவ்வளவு விரைவில் சந்திரனில் இறங்க வேண்டும் என்றும், சந்திரனில் தங்கள் வேலைகளை முடித்துக் கொண்டு அதன் பின்பு தாங்கள் வானரதத்தில் ஓய்வெடுப்பதாகவும் ஆம்ஸ்ட்ராங் விருப்பம் தெரிவித்தார்.

எனவே 5 மணி நேரத்திற்கு முன்பே விண் வீரர்களை இறக்க முடிவு செய்யப்பட்டது.

எனினும் கடைசி நிமிடத்தில் விண் வீரர்கள் வெளியே வருவதற்குத் தாமதப்பட்டது. கதவைத் திறப்பதில் சில கஷ்டங்கள் ஏற்பட்டதே இதற்குக் காரணம்.

முதலில் இறங்கிய ஆம்ஸ்ட்ராங் முதல் படியின் தளத்திலேயே அதிக நேரம் நின்றார். உயரே சுற்றிக் கொண்டிருக்கும் கொலின்ஸுடன் தொடர்பு கொண்டதே இதற்குக் காரணம்.

இரவு ஈகிள் சந்திரனில் இறங்கியபோது அதன் "சேர்ச் லைட்" டில் பழுது ஏற்பட்டது. எனினும் இந்த வெளிச்சம் அவசியமில்லை என்றும் சூரிய ஒளியின் உதவியே போதும் என்றும் அறிவிக்கப்பட்டது.

"ஈகிள் வந்து இறங்கிவிட்டது" என்று ஆம்ஸ்ட்ராங் தனது வாகனத்தை சந்திரனில் இறக்கியவுடன் கூறினார். வானரதம் சில ஆயிரம் அடி தூரத்தில் வரும் போதே இறங்குமிடத்தை ஆம்ஸ்ட்ராங் கணித்துக்கொண்டார்.

அதன்பின் குறிப்பிட்ட இடத்தில் "ஈகிளை" சரியாக இறக்கினார் ஆம்ஸ்ட்ராங். அப்போது அல்ட்ரின் அதை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டு இருந்தார்.

சந்திரனில் 20 முதல் 30 அடி உயரமான பாறைகள் தங்கள் கப்பலுக்கப்பால் தென்படுவதாகவும், தங்கள் முக்கோண ஜன்னலில் இருந்து பார்க்கும்போது ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு திசையில் வித்தியாசமான நிறங்களுடன் காணப்படுவதாகவும் ஆம்ஸ்ட்ராங் தெரிவித்தார்.

ஈகிள் சந்திரனில் இறங்கிய செய்தியைக் கேள்வியுற்றவுடன் உலகத் தலைவர்கள் எல்லாம் பாராட்டுச் செய்திகளை அனுப்ப ஆரம்பித்து விட்டார்கள். ஜனாதிபதி நிக்ஸன், பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் ஆகியோர் இந்த அபார சாதனை குறித்து பெருமகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

உலகத்து நகரங்களில் எல்லாம் மக்கள் பல்லாயிரக்கணக்கில் கூடி சந்திரனில் மனிதன் இறங்கிய சாதனையைப் பார்த்து மகிழ்ந்தார்கள்.

அமெரிக்காவின் சாதனை தனது நாட்டின் சொந்தப் பெருமையல்ல என்றும் அது மனித குலத்துக்கே பெருமை என்றும் ஜனாதிபதி நிக்ஸன் தெரிவித்தார்.

பசிபிக்கில் வருகிற 24-ம் திகதி இரவு 10-19க்கு விண் வீரர்கள் இறங்க இருந்தார்கள். ஆனால் எதிர்பார்த்ததைவிட துரிதமாகக் காரியங்கள் நடைபெற்றமையால் அதற்கு முன்பே அவர்கள் இறங்கி விடுவார்கள்.

"நாங்கள் உங்களை வரவேற்க ஆவலுடன் காத்துக்கொண்டு இருக்கிறோம்" என பூமியில் உள்ள கட்டுப்பாட்டு அதிகாரிகள் விண் வீரர்களுக்கு அறிவித்தனர்.

சந்திரனில் நடப்பது கஷ்டமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும், ஆனால் சுலபமாக ஓடியாடித் திரியக்கூடிய முறையில் இருப்பதாயும் விண் வீரர்கள் தெரிவித்தார்கள்.

இதனால் குறிப்பிட்ட ஒரு இடத்தில் மட்டும் மண்ணை அள்ளாமல் நீல் ஆம்ஸ்ட்ராங் பல இடங்களுக்கு ஓடி ஓடிச்சென்று மண்ணை அள்ளிப் பேழைகளை நிறைத்தார். கால், கைகளை இலகுவாக அசைக்க முடிவதாகவும் விண்வீரர் தெரிவித்தனர்.

நீண்ட கரண்டியால் மண்ணையும், கற்களையும் வாரி வாரி பைகளில் நிரப்பினார் ஆம்ஸ்ட்ராங். சுமார் 50 ருத்தல் மண்ணை அவர் அள்ளியதாக அறிவிக்கப்பட்டது.

சந்திரனில் ஈர்ப்புச் சக்தி குறைவாக இருப்பதால் இந்த 50 ருத்தல் பூமியில் அதைப் போல் ஆறு மடங்கு கூடியதாக இருக்கும். (ல)


உங்கள் வீட்டில் ஒரு வைத்தியர் இருப்பதென்றால் எவ்வளவு நல்லது!



சித்தாலேப்ப

போத்தல் ஒன்றை வாங்கி வைத்திருப்பதனால் அந்தக் கவலை தீர்ந்து விடுகிறது.

வீட்டில் எவருக்காயினும் ஏற்படும் எந்த ரோகத்திற்கும்

ஒரு முறை பாவித்துப் பாருங்கள்.

ஒரு போத்தலின் விலை ரூ. 2-50

தபால் செலவு 50 சதம்.

பேர்ஸி டிரேடிங் கொம்பனி

185, ஓல்கொட் மாவத்தை, கொழும்பு—11.



இப்பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு - 12. (இலங்கை). வெளியிட்ட திகதி 22 ஜூலை 1969.

Thanthi, 5, Gunasena, Mawatha, Colombo 12,


# அங்கு சந்திரனை மிதிக்கையில் இங்கு பேய் விரட்டினார்கள்!

தந்தி நிருபர்

நேற்று முன்தினம் இரவிரவாக இலங்கையெங்கும் மக்கள் ரேடியோ அருகில் இருந்தனர். விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தைப் புகழ்ந்தபடி "அப்பலோ – 11" சந்திரனை நோக்கி முன்னேறுவதைப் பற்றி உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். ஊரெங்கும் இதே பேச்சு. மனிதன் சந்திரனை அடைய முடியாது என்று இரண்டொரு நாட்களுக்கு முன் கூறிக் கொண்டிருந்தவர்களும் நேரம் செல்லச் செல்ல வாயைப் பொத்திக் கொண்டனர்.

மனிதன் சந்திரனில் காலடி வைக்க மாட்டான் என பந்தயம் கட்டிய சிலர் தலைமறைவாகி இருந்தனர். ஆனால் அவர்களும் எங்கோ ஒரு மூலையில் நின்றபடி ரேடியோவைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தைக் கண்டு பேய், பிசாசுகள் கூட நடுங்கிக் கொண்டிருந்த இச்சமயத்தில், கிரிலப்பனை, பொல்ஹேன் கொடை ரோட்டில் நடைபெற்ற ஒரு சம்பவம் பலரையும் வியக்க வைத்தது.

சம்பவத்தை நேரில் கண்ட நான் அதிர்ச்சி அடைந்தேன். ரேடியோ கேட்பதையும் விட்டு விட்டு அவ்விடம் விரைந்தேன்.

நான்கு, ஐந்து வீடுகள் ஒரே வரிசையில் இருக்கின்றன. ஒரு வீட்டைத் தவிர மற்ற எல்லா வீடுகளிலும் ரேடியோ கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் ஒரு வீட்டில்......

வீட்டுக்காரர் நடுவில் அமர்ந்திருக்கிறார். அவரைச் சுற்றி அவரது மனைவி, மக்கள். அவர்களுக்கு முன்னால் ஒரு சிறிய மேசை. அதன் மீது மந்திரம் செய்வதற்குத் தேவையான பாக்கு, வெற்றிலை, தேசிக்காய், பூ வகைகள், எண்ணெய் வகைகள் மற்றும் இன்னோரன்ன பொருட்கள். ஒரு புறம் சட்டி ஒன்றில் தீ பற்றி எரிகிறது. மறுபக்கம் சாம்பிராணிப் புகை மணக்கிறது.

இவைகளுக்கு முன்னால் தலையில் சிவப்பு தலைப்பாகையுடன் கையில் பாக்கு மரத்துப் பூக் கொத்து ஒன்றுடன் ஒருவர் நின்று ஆடுகிறார். அவருக்கு அருகில் ஒருவர் நின்றபடி மேளம் அடிக்கிறார். இன்னொருவர் பேய்களை விரட்டுவதற்கு உரத்த குரலில் பாடுகிறார்.

கையில் பாக்கு பூ வைத்திருந்தவர் ஆடி ஆடி முன்னால் அமர்ந்திருந்த வீட்டுக்காரர் தலையில் அடிக்கடி அந்தப் பூவால் அடிக்கிறார்.

அங்கு கூடி வேடிக்கை பார்த்திருந்த சிலரிடம் என்ன விஷயம் என்று கேட்டேன். வீட்டுக்காரரின் நெருங்கிய உறவினர் ஒருவர் கூறியதாவது:-

"சந்திரனில் மனிதன் காலடி வைத்தால், சந்திரன் கோபம் அடைந்து மனித வர்க்கத்தையே சபிக்கும். பேய்களை மனிதர் மீது ஏவி விடும். அதனால் மனிதர்களுக்கு மாபெரும் இடையூறுகள் விளையும். இதைத் தவிர்ப்பதற்காக மனிதன் சந்திரனில் கால் வைக்கும் சமயத்தில் எங்கள் குடும்பத்துக்கும் இந்த விஷயத்துக்கும் ஒரு விதமான சம்பந்தமும் கிடையாது என நாங்கள் பிரார்த்தனை செய்து சந்திரனால் ஏவி விடும் பேய்களை விரட்டுகிறோம்" என்று உணர்ச்சியுடன் கூறினார்.

இப்படியான பைத்தியக்காரர்கள் இன்னும் உலகத்தில் வாழ்கிறார்களா? என்று எண்ணியபடி நான் வீட்டுக்குச் சென்று ரேடியோ கேட்பதில் ஈடுபட்டேன். (ல)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org